**கவனிக்க.-** 2006.09.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1462 - 2006 සැප්තැම්බර් 08 වැනි සිකුරාදා - 2006.09.08

1462 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 806 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 808 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

*13.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

*14.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

*அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பரிசோதனை உத்தியோகத்தர் பதவி*

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பரிசோதனை உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் 1 தொடக்கம் 8 வரை முதலாம் பக்கத்தில் அமையும் வண்ணம் செ. மீ. 34X21 (13"X8") அளவு கொண்ட தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2006.10.05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடிய வகையில் "அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், சுதந்திர சதுக்கம், கொழும்பு 07" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்கள் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க எளமேல் மூலையில் "பரிசோதனை உத்தியோகத்தர் பதவி" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. **சேவையில் ஈடுபடுவதற்கான பிரிவுகளும் சேவை நிபந்தனைகளும் :**

2.1 இப்பதவி நிரந்தரமானதும். கொடுத்துதவும் ஓய்வூதிய நிதியின்கீழ் ஓய்வூதியத்திற்கு உரித்துண்டு. ஏற்கனவே ஓய்வூதியம் பெறும் பதவியிலிருப்பவராயின், தொடர்ந்து ஓய்வூதியம் பெறுவார்.

2.2 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இத்தீவின் எப்பாகத்திலாயினும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

2.3 அரசாங்க சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் பரிசோதனை உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கும் அமைவாக இந்நியமனமானது கொடுக்கப்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கான திரட்டிய ஆண்டுச் சம்பளம் (தொகுதி எம். என். 4.2006) ரூபா 1,78,200-10X2, 220-4X2,520-15X3,480-7X3,840-ரூபா 2,89,560 (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 இன்படி)

மூன்றாம் வருடாந்த சம்பளப் படிநிலைக்கு முன்னர் (ரூபா 1,84,860 ஆண்டுச் சம்பளத்திற்கு முன்) வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உள்ளது.

**குறிப்பு.**- வினைத்திறன்காண் தடை.- பதவியில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்து செல்லமுன் வினைத்திறன்காண் தடையில் சித்தியடைதல் வேண்டும். இது எழுத்திலான பரீட்சையாகும். தேவைக்கேற்ப வருடத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் வினாத்தாளிற்கு விடையளித்தல், ஆய்வுக் கட்டுரை, தயார்படுத்தி கையளிக்கப்படல் வேண்டும். வயது அடிப்படையில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை விலக்களிக்கப்படமாட்டாது.

4. **பதவிக்கான கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும்.**- எல்லா விண்ணப்பதாரர்களும் கீழ் வரும் தகைமைகளை உறுதிப் படுத்தும் பொருட்டு திருப்திகரமான சாட்சிகளை முன்னளித்தல் வேண்டும் :-

4.1 நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த உடல்நலம் கொண்டவராகவும் விளங்குதல் வேண்டும் ;

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பரீட்சார்த்திகள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4.3 கல்வித் தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதியில் பூர்த்திசெய்திருக்கவேண்டியவை :

(i) கல்வித் தகைமைகள்.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

5. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை.**- எல்லா ஆட்சேர்ப்புகளும் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஆட்சேர்ப்பு விதிமுறைகளின்படி முறையான நேர்முகப் பரீட்சையின்மூலம் திணைக்கள உயரதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

6. பின்வரும் பத்திரங்களை தேவையேற்படும்பொழுது முன்வைக்குமாறு விண்ணப்பதாரர்கள் பணிக்கப்படுவார்கள் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் (சமய ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பட்டச்சான்றிதழ்களும் உயர்கல்விச் சான்றிதழ்களும்

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு (இவற்றில் ஒன்று கல்வி நிறுவனமொன்றின் பணிப்பாளர் அல்லது பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.)

(ஈ) தொழில்சார் அனுபவம் அல்லது தொழினுட்ப தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள்

7. **விண்ணப்பங்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-**

(அ) பெற்றுள்ள பட்டச் சான்றிதழ் ;

(ஆ) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ்.

8. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைஅவர்களது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

9. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள எவையேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுசெய்வதற்கு முன் தெரியவருமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். நியமனத்தின் பின்னர் தவறு தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படும்.

10. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளுக்கான நியமித்தல் தொடர்பான பொது நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளவும்.

11. இந்நிபந்தனைகளினால் வெளியிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரினால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செய்யப்படும் திகதியும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்கள் ஏதேனும் எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அதிகாரம் உண்டு.

ஈ. ஜீ. சோமபால,
அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர்.

அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2006.08.22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

*(விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 1 இலிருந்து 8 வரையிலான பந்திகளுக்குரிய விபரங்கள் முதல் பக்கத்தில் மாத்திரமே அடங்குதல் வேண்டும்.)*

**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பரிசோதனை உத்தியோகத்தர் பதவி**

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்) :----.

   (ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (அ) முகவரி :----.

   (ஆ) நிரந்தர முகவரி :----.

3. மாவட்டம் :----.

4. பால் :----.

5. தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

6. வயது :
   (அ) பிறந்த திகதி :-

   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

   (ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :-
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. விவாகமானவரா ?/விவாகமாகாதவரா ? :----.

8. தகைமைகள் :

   (அ) கல்வித் தகைமைகள் :

| பட்டம் | ஆண்டு | பாடங்கள் | பல்கலைக் கழகங்கள் |
|---|---|---|---|
| | | | |

   (ஆ) தொழிற் தகைமைகள் :----.
   ---------------------------------------------------
   ---------------------------------------------------
   ---------------------------------------------------
   ---------------------------------------------------

9. பாடசாலையைவிட்டு விலகியபின் செய்த தொழிலும்/ அல்லது பயிற்சி பற்றிய விபரங்கள் (சேவையில் சேர்ந்த, சேவையைவிட்டு விலகிய திகதிகளையும் விலகியதற்கான காரணங்களையும் குறிப்பிடுக.)

10. தற்போது வகிக்கும் பதவி பற்றிய விபரங்கள் :-

   (அ) பதவி :----.

   (ஆ) திணைக்களம்/ நிறுவனம் :----.

   (இ) நியமனத் திகதி :----.

   (ஈ) நிரந்தரம்/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதிய உரித்தற்றது/ தற்காலிகமானது என்பதைக் குறிப்பிடுக :----.

   (உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :----.

   (ஊ) பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டமும் தற்பொழுது கிடைக்கும் சம்பளமும் ? :----.

11. நீதிமன்றமொன்றில் ஏதேனும் குற்றப் பாதகச் செயலுக்காகக் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அக்குற்றம் என்ன என்பதையும் அதற்குக் கிடைத்த தண்டனை என்ன என்பதையும் குறிப்பிடுக : ----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் என நான் இத்தால் உறுதிகூறுகின்றேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என தெரிவுசெய்யப்படுமுன் அறிய நேர்ந்தால்

தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்றபின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவரின் சிபாரிசு :**

திரு./ திருமதி/ செல்வி ---- இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுகின்றார் எனவும், இப்பதவிக்கு சம்பந்தப்பட்ட அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனவும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

---------------------------,
திணைக்கள தலைவரின்/கூட்டுத்தாபனத்தின் தலைவரின்
அதிகாரம்பெற்ற அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

9-299

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2006

இலங்கை அரசின் 1997.11.19 ஆந் தேதிய 1002/ 13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வாறான இலங்கை நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 9 ஆம், 10 ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, இலங்கை நூலகர் சேவை தரம் II இலும், தரம் III இலும் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையொன்று, மார்கழி (திசெம்பர்) மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

2. (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் இப்பரீட்சைக்கென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டொழுகுதலும் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவார்.

3. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2006.10.09 ஆந் திகதிக்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **அடையாள அட்டை.-** விண்ணப்பதாரிகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடவேளையின் போதும் தமது அடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளரின் திருப்திக்கேற்ப நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சைஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

5. **விண்ணப்பங்கள்.-** விண்ணப்பங்கள் A4 அளவினதான ஒரு தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 5 வரை முதலாவது பக்கத்தில் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம். ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

முதல்முறை இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. எனினும், அடுத்த தடவையாகத் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 175 ரூபாவும் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 90 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இப் பணத்தொகையை நாட்டில் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப் படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுதல் தொடர்பாக அனுமதி வழங்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்வது தேவைப்படலாம்.

6. உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தி சரியாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். விண்ணப்பதாரிகள் தத்தம் அனுமதி அட்டைகளைப் பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு

அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பரீட்சார்த்தியொருவர் பரீட்சைத் தேதிக்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் தமது அனுமதி அட்டையைப் பெற்றிராதவிடத்து அவர் உடனடியாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" (தந்தி முகவரி : "பரீட்சை, பத்தரமுல்லை") எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன், அது பற்றி அறிவிக்க வேண்டும்.

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;

(இ) முழு அஞ்சல் முகவரி ;

(ஈ) விண்ணப்பம் அஞ்சல் இடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவுத் தபால் இலக்கம் அத்துடன் கடிதம் அனுப்பிய தேதி ;

(உ) பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் அதன் சான்றுப் படுத்திய நிழற்படப் பிரதி.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணபத்தை உடைய அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு முதன்முதலில் சேர்ந்தபோது எம் மொழிமூலம் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்களோ அதே மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி இச்சேவையிற் சேர்ந்தவர்கள் அவர்கள் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

9. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றமுடியும். எவ்வாறாயினும் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுகை**.- பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சையிற் சித்தியெய்திய அலுவலர்களின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

11. **பரீட்சைத் திட்டம்** :

11.1 நூலகச் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை :-

(i) பொது நிர்வாகம் - நேரம் 2 மணித்தியாலங்கள் தாபன விதிக்கோவையின் I முதல் VIII வரையும், அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்களும் உள்ளடங்கும்.

(ii) நிதி முறைமைகள் நேரம் 2 மணித்தியாலங்கள் நிதி ஒழுங்குவிதி - பகுதி 1 (X ஆம் அத்தியாயம் புறநீங்கலாக)
நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளும்.

**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சையிற் சித்தயடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

11.2 நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை :

1. பொது நிர்வாகமும் நிதி முறைமையும் - (நேரம் 3 மணித்தியாலங்கள்)

(i) இலங்கை அரசியலமைப்புச் சட்டம்
(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் I முதல் VIII வரையும், அத்துடன் XIV, XXIV,XXV , XXVII, XXVIII, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்களும் உள்ளடங்கும்.
(iii) இலங்கை நூலகச் சங்க சட்டவாக்கற் சட்டம் - 714
(iv) இலங்கை நூலகச் சேவைச் சபைச் சட்டம்
(v) புலமைச் சொத்துக்கள் சட்டம்
(vi) நிதி ஒழுங்கு விதிகள் - பகுதி 1
(vii) நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதியும்.

2. நூலக ஒழுங்கமைப்பு (நேரம் : 3 மணித்தியாலங்கள்)

(i) நூலகங்களின் வகுதிகளும் சேவைகளும்
(ii) நூலக வளங்களும் அமைப்புகளும்
(iii) அரசாங்க வெளியீடுகளும் அவற்றின் பாவனையும்.

**கவனிக்க வேண்டியது**.- இப்பரீட்சையிற் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

இணைந்த சேவைகள் பிரிவு,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006, ஓகத்து 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

*இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2006*

(**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பப்படிவம் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.0 1.1 கடைசிப் பெயர், முதலெழுத்துக்களுடன் (திரு./ திருமதி/ செல்வி) :-----.
(சிங்களத்தில்/ தமிழில்)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
(சிங்களத்தில்/ தமிழில்)

1.3 கடைசிப் பெயர் முதலெழுத்துக்களுடன் :-----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில், உதா. SILVA, A.B.)

1.4 தேசிய அடையாள அட்டை இல. :-

1.5 பிறந்த திகதி :-
ஆண்டு : மாதம் : நாள் :

1.6 பால் :-
(பெண் - 1, ஆண் - 0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-
2.1 அலுவலக/ திணைக்கள/ நிறுவனத்தின் பெயர் :-----.

2.2 அலுவலக முகவரி :-----.

3.0 தற்போது வகிக்கும் பதவி :-----.
3.1 பதவி :-----.

3.2 நியமனக் கடிதத்தின் இல. :-----.

4.0 இலங்கை நூலகர் சேவையில் நீங்கள் விண்ணப்பிக்கும் வினைத் திறமை காண் தடைப்பரீட்சைக்கு எதிரில் 'x' அடையாளத்தை இடவும் :-----.

| | |
|---|---|
| 4.1 நூலகர் சேவை தரம் III : | |
| 4.2 நூலகர் சேவை தரம் II : | |

4.3 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் :-
(1) :-----.

(2) :-----.

5.0 5.1 நீர் முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றீரா ? : -----.

5.2 இல்லாவிட்டால் வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச் சீட்டின் இலக்கம் :-----.

திகதி :-----.
பணத்தொகை :-----.
வழங்கப்பட்ட அஞ்சல் அலுவலகம் :-----.

> பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும்.

6.0 பரீட்சார்த்தியின் உறுதியுரை.- மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோற்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும் எவ்விதத்திலானதொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்து கிறேன். இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகிறேன்.

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

7.0 ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II/III ஐச் சேர்ந்த அலுவலர் என்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,

(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,

(iv) இவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடைவர் என்றும்

சான்றுபடுத்துகின்றேன்.

........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

9-384

## அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை – 2006

மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையொன்று, 1994.07.26 ஆந் தேதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் 8 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, மார்கழி (திசெம்பர்) மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

2. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2006.10.09 ஆந் திகதிக்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முன் வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. (i) விண்ணப்பப்பத்திரத்தை 8"x12" அளவுகொண்ட தாளொன்றின் இரு பக்கங்களையும் உபயோகித்துத் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ii) அரச கரும மொழிக்கொள்கையின் நோக்கங்களுக்காக சகல அலுவலர்களும் தமது விண்ணப்பப்படிவங்களை அரசகரும மொழியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றினை அதே மொழியில் நிரப்பவும் வேண்டும்.

4. **பாடவிதானமும், பரீட்சைத் திட்டமும்.**– *முதலாம் பாடம் வினாத்தாள் இல. 1 :*

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்
(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் :–

(அ) ஓர் அரசகரும ஆவணம் அல்லது அறிக்கை, அத்துடன்
(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை என்பவற்றை மொழிபெயர்த்தல் விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழிமூலத்திற்கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்.

(i) சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு
(ii) சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு
(iii) தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு

மூன்று 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்று – 100 புள்ளிகள்

*இரண்டாம் பாடம் வினாத்தாள் இல. 2*

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி ; அத்துடன்
(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் :–

(அ) ஓர் அரசகரும ஆவணம் அல்லது அறிக்கை, அத்துடன்
(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

விண்ணப்பதாரர்கள் தனது மொழிமூலத்திற்கேற்ற படி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்.

(i) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு
(ii) ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு
(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு

மூன்று 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத் தாள் ஒன்று – 100 புள்ளிகள்

இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்.**– இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும்:–

(அ) முதன் முறைக்காக கட்டணமெதுவும் அறவிடப்படமாட்டாது.

(ஆ) அடுத்துள்ள சந்தர்ப்பத்தில் தோற்றுவதற்கான கட்டணங்கள் முழுப்பரீட்சை எடுப்பதற்கு ரூபா 175 ஆகவும் தனித்து ஒரு பாடம் எடுப்பின் ரூபா 90 ஆகவும் இருக்கும்.

(இ) பரீட்சைக் கட்டணங்கள், வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்தலாம். அவ்வாறு செலுத்திய தற்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப் படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

7. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**– (i) விண்ணப்பங்களை அனுப்பி வைத்த சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் இன்றி அவர்களை பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கோ அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி அட்டையுடன் பிரத்தியேகமாக நேரசூசியொன்றும் வழங்கப்படும்.

(iii) இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அவ்விதித்துரைகளை மீறுவதன் பேரில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எத்தண்டனையையும் அனுபவிக்க அவர்கள் ஆளாக்கப்படுவார்கள்.

(iv) விண்ணப்பதாரிகளுக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப் பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சை எடுப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டதானது ஒரு விண்ணப்பதாரர் அப்பரீட்சையை எடுப்பதற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

8. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு.

அனுமதி அட்டையுடன் மேற்போன்ற ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

10. பரீட்சைத் தேதிக்கு ஏழு நாட்களுக்கு முன் அனுமதி அட்டை விண்ணப்பதாரியொருவருக்குக் கிடைக்கப்பெறாவிடின், அவர் தாமதமெதுவுமின்றி, "பரீட்சை ஆணையாளைர் நாயகம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு (தந்தி அனுப்பும் முகவரி : "பரீட்சை", பத்தரமுல்ல) அவர் பின்வரும் தகவல்களுடன், தமக்கு அத்தேதி வரை அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதனை தொடர்புகொண்டு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்.

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(இ) முழு முகவரி ;

(ஈ) திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பம் தபாலில் இடப்பட்ட தேதி, அஞ்சல் அலுவலகம், பதிவு செய்யப்பட்ட இலக்கம் ;

(உ) பணம் செலுத்தப்பட்டிருப்பின் அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி.

11. இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயமெதற்கும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதித் தீர்மானமாயிருக்கும்.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

இணைந்த சேவைகள் பிரிவு,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2006 ஆவணி 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

*அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை - 2006*

(**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பப்படிவத்தைச் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.0 1.1 கடைசிப் பெயர், முதலெழுத்துக்களுடன் (திரு./திருமதி/செல்வி) :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 கடைசிப் பெயர் முதலெழுத்துக்களுடன் :-----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில், உதா. SILVA, A.B.)

1.4 தேசிய அடையாள அட்டை இல. :-

1.5 பிறந்த திகதி :-
ஆண்டு : மாதம் : திகதி :

1.6 பால் :-
(பெண் - 1, ஆண் - 0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-
2.1 அலுவலக/திணைக்கள/அமைச்சின் பெயர் :-----.
2.2 அலுவலக முகவரி :-----.
2.3 பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :-----.

3.0 தற்போது வகிக்கும் பதவி :-
3.1 பதவி :-----.

3.2 நியமனக் கடிதத்தின் இல. :-----.

4.0 4.1 நீர் தோற்றுவது முழு பரீட்சைக்குமா ? அல்லது ஒரு பாடத்திற்கு மாத்திரமா ? :-----.

4.2 விண்ணப்பிக்கும் பாடங்கள் :-

(1) :-----.
(2) :-----.

5.0 5.1 நீர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றீரா ? : -----.

5.2 இல்லாவிட்டால் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின் இலக்கம் : -----.

திகதி :-----.
வழங்கப்பட்ட அஞ்சல் அலுவலகம் :-----.

> ஒரு பாடத்திற்கு ரூபா 90 உம், முழுப் பரீட்சைக்கு ரூபா 175 உம் வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை இதில் ஒட்டிவிடல் வேண்டும்.
> பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளவும்.

6.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- மேற் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன்.

..................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

7.0 ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த மொழி பெயர்ப்பாளர் என்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடைவர் என்றும்,

இத்தால் நான் சான்றுபடுத்துகின்றேன்.

.........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

9-385

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.